*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.1504/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திரு.மணிகண்டன் த/பெ.கருணாகரன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16.07.2026**

துவக்க நேரம் 01.36 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் தலைவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.01.2025 அன்று 18.00 மணியளவில் நானும், என்னுடன் முதல் நிலைக்காவலர் திரு.சுரேஷ் என்பவரும், காவல் உதவி ஆய்வாளர் திரு.கோபால் அவர்கள் தலைமையில், எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மதுவிலக்கு வேட்டை சம்மந்தமாக தலைவாசல் காவல் நிலைய சரகம், வடகுமரை எதிரி வீட்டின் அருகில் கண்காணித்து சென்றபொழுது, அங்கிருந்த ஒரு ஆண் நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் மாணிக்கம் த.பெ பெரியசாமி என்று கூறினார். பின்னர் எதிரி விற்றதுபோக மீதம் அவரிடமிருந்த சுமார் 180 ML அளவுகொண்ட Express Brandy – 08 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி மாணிக்கம் என்பவரை, காவல் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே கைது செய்தார்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த Express Brandy – 08 பாட்டில்களை, அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில், காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1–வது கையெழுத்து என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள எனது 1–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்துக்களில் இருந்த திரவத்தை எங்களது உயர் அதிகாரியின் உத்தரவு படி காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்திலேயே, எங்கள் முன்னிலையில் கீழே கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தார். அழித்தல் மகஜரில் உள்ள 1–வது கையெழுத்து என்னுடையது தான். (**அழித்தல் மகஜரில் உள்ள எனது 1–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிறகு எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய, காவல் உதவி ஆய்வாளருக்கு நானும் உதவியாக இருந்தேன். காவல் உதவி ஆய்வாளர், என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் சொல்லும் சம்பவயிடமானது மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான், ஆனால் நாங்கள் செல்லும் பொழுது அந்த இடத்தில் மக்கள் யாரும் இல்லை. தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. என் முன்பாக சம்பவயிடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜரோ, மாதிரி வரைபடத்தையோ காவல் உதவி ஆய்வாளர் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் சாராயத்தை எங்கு அழித்தோம் என்றால் சம்பவயிடத்தில்தான் அழித்தோம்.

2) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பாட்டில்களையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்காக, காவல் உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.46 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.16 18:25:34 +0530
Judicial Magistrate No.2, Attur.